# இயேசுவே தேவன்

J E S U S I S L O R D

ரோமர் 9:5

“மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் (யூதா கோத்திரத்தில்) பிறந்தாரே; இவர் (இயேசு) என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும் மேலான தேவன்”.

அன்பானவர்களே, தேவன் தமது அன்பை இந்த உலகிற்கு விளங்கப்பண்ணினது கர்த்தராகிய கிறிஸ்துவின் மூலமாகத்தான். பிறகு எதற்கு தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமானார் இந்த உன்னதமானவர்; தேவக்குமாரன் என்றும் அழைக்கப்-படுகின்றார். மாம்சத்தினுள் வைக்கப்பட்ட தேவமகிமையே மனுஷகுமாரன்.

தேவ அனபான கிறிஸ்து, தம்மிலிருந்து வெளிப்பட்டதினால், தம்முடைய காணப்படாத வல்லமை, தேவத்துவம் போன்றவைகளை, பரிசுத்தமான தமது குமாரனில், பிதாவாகிய தேவன் காண்பித்திருக்கின்றார். தேவ ஆவியானவர் தேவனின் உள்ளான அழகு; தேவ வார்த்தையானவர் அவரின் வெளியான அழகு. இவ்விருவரும் பிதாவாகிய தேவனோடு ஐக்கியமானவர்கள். மனிதர்கள் கண்களால் பார்த்தது தேவனின் வெளியான அழகை, அதாவது இயேசுவை; ஆனால் இன்றும் இருதயத்தில் உணருவது தேவனின் உள்ளான அழகை, அதாவது பரிசுத்த ஆவியானவரை.

தேவக்கிருபையின் உருவமான மனுஷகுமாரனை (இயேசுவை), பிதாவாகிய தேவன், தேவ தூதரிலும் சற்றே சிறியவராக்கினார் சிலுவை மரணத்தின் மூலமாக.

**எதற்காக இந்த புதிய ஏற்பாடு?**

பாவத்தினால் சிறுமைப்பட்ட நம்மை மீட்பதற்காக. மரணத்தை வென்ற கிறிஸ்து, உயிர்த்தெழுதலின் சக்தியாக, பிதாவினால் மகிமையினாலும், கனத்தினாலும் முடிசூட்டப்பட்டார். தேவன் தமது கட்டளைகள் மற்றும் கற்பனைகளை மிகவும் மதித்து நடப்பவர். அதனால்தான், மாம்சத்திலுள்ள பாழாய்ப்போன மனித உள்ளங்களை, பரலோக இராஜ்ஜியத்தின் செல்வங்களாக மாற்றும்படி, தம்மையே பலியாகத்தந்து, உலகத்தின் இரட்சகரானார், இந்த மாம்சத்தில் வந்த சர்வ வல்ல தேவனானவர்.

"கர்த்தருடைய நாமத்தை (இயேசுவை) தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான் (காக்கப்படுவான்)"

ஆமென்,

அல்லேலுயா.

---

**இயேசுவின் குடும்பம் ஊழியங்கள்**